
உ
சிவமயம்



# அணையா விளக்கு

அமரர்
கனகசுந்தரம் பாலகிருஷ்ணன்
அவர்கள்

19. 07. 2002

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்





யாழ்ப்பாணம் - தொல்புரம்
பிரபல சைவ வேளாண் மரபினரும்
கனகசுந்தர முதலியார் வழித்தோன்றலும்
அமரர் திரு. மாதவர் கனகசுந்தரம் அவர்களின்
சிரேஷ்ட புத்திரனும்
காங்கேசன்துறை - கருகம்பனை
அமரர் வைத்திய கலாநிதி பூ. பொன்னம்பலம் **J. P**
அவர்களின்
சிரேஷ்ட மருமகனுமாகிய
இளைப்பாறிய சீமெந்துக் கூட்டுத்தாபன
இரசாயனப் பகுப்பாய்வாளர்

**திருவாளர் பாலகிருஷ்ணன் அவர்கள்**

சிவபதமெய்தியமை குறித்து
வெளியிடப்பெற்ற

# நினைவுமலர்

சித்திரபானுஸ்ரீ ஆடிமீ 3ந் திகதி
**19. 07. 2002**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

தினமும்

அணையாவிளக்காக

எனது

மனக்கோயிலில்

குடிகொண்டிருக்கும்

எனது

ஆருயிர் நாயகனின்

நினைவு மலரை

அவர்களின்

பாத கமலங்களில்

சூட்டிச்

சமர்ப்பித்து வணங்குகின்றேன்


*மனைவி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# அமரர் திரு. கனகசுந்தரம் பாலகிருஷ்ணன்

தோற்றம் 1927. 06. 18

மறைவு 2002. 06. 19

## கட்டளைக்கலித்துறை

*அன்னையொப்பா யன்பி னற்புத்தி கூறவினாய்ந்த மந்திரி*
*தன்னையொப்பாய் நன்னெறி காட்டுதலிற் சமயகுரு*
*நின்னையொப்பா ரெவர் நீ யெம் முயிர்த்துணையா நினைந்தோம்*
*மின்னாதிடித்ததுபோற் பிரிந்தாய் நம் விதிவசமே*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
*சிவமயம்*

*திருச்சிற்றம்பலம்*



# விநாயகர் வணக்கம்

பிடியதன் உருஉமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவர்இடர்
கடி கணபதி வர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில் வலிவலம் உறை இறையே.

# தேவாரம்

தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண் மதிசூடிக்
காடுடைய சுடலைப்பொடி பூசி யென்னுள்ளங்கவர் கள்வன்
ஏடுடைய மலரான் முனைநாட் பணிந்தேத்த வருள் செய்த
பீடுடைய பிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே.

கூற்றா யினவா றுவிலக்ககிலீர்
கொடுமை பலசெய் தன நானறியேன்
ஏற்ற யடிக்கே யிரவும் பகலும்
பிரியா துவணங் குவனெப் பொழுதும்
தோற்றா தென்வயிற் றினகம் படியே
குடரோ டுதுடக் கிமுடக் கியிட
ஆற்றே னடியே னதிகைக் கெடில
வீரட்டானத் துறையம் மானே.

பித்தாபிறை சூடீபெரு மானேயரு ளாளா
எத்தான் மற வாதே நினைக் கின்றேன் மனத் துன்னை
வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூரருட்டுறையுள்
அத்தாவுனக் காளாயினி யல்லேனென லாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்து
உன்விரை ஆர் கழற்கு, என்
கைதான் தலை வைத்துக்
கண்ணீர் ததும்பி, வெதும்பி, உள்ளம்
பொய்தான் தவிர்ந்து, உன்னைப்
போற்றி சயசய போற்றி என்னும்
கைதான் நெகிழ விடேன்
உடையாய் என்னைக் கண்டு கொள்ளே!

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே! உலப்பிலா வொன்றே!
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே!
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே!
சித்தத்துள் தித்திக்கும் தேனே!
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே!
அம்பலம் ஆடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி
அழுதிடப் பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்(று) அருள
செய்தவன் மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
சிற்றம் பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல்
லானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

## திருமந்திரம்

சிவ சிவ என்கிலர் தீவினையாளர்
சிவ சிவ என்றிடத் தீவினை மாளுஞ்
சிவ சிவ என்றிடத் தேவருமாவர்
சிவ சிவ என்னச் சிவகதிதானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பட்டினத்தார் பாடல்

முடிசார்நத மன்னரு மற்றுமுள் ளோரு முடிவிலொரு
பிடி சாம்ப ராய்வெந்து மண்ணாவ துங்கண்டு பின்னு மிந்தப்
படிசார்ந்த வாழ்வை நினைப்பதல் லாற் பொன்னி னம்பலவர்
அடிசார்ந்து நாமுய்ய வேண்டுமென் றேயறிவாரில்லையே.

## திருப்புராணம்

உலகெலா உணர்ந்து ஓதற்கரியவன்
நிலாவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்

## திருப்புகழ்

இசைந்த ஏறும் கரியுரி போர்வையம் எழில் நிறும்
இலங்கு நூலும் புலியத ளாடையும் மழுமானும்
அசைந்த தோடுஞ் சிரமணி மாலையும் முடிமீதே
அணிந்த ஈசன் பரிவுடன் மேவிய குருநாதா
உசந்த சூரன் கிளையுடன் வேரற முனிவோனே
உகந்த பாசக் கயிறொடு தூதுவர் நலியாதே
அசந்த போதென் துயர் கெட மாமயில் வரவேணும்
அமைந்த வேலும் புயமிசை மேவிய பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான் மறையறங்கள் ஓங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

*திருச்சிற்றம்பலம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

அமரர்
# கனகசுந்தரம் பாலகிருஷ்ணன்
அவர்களின்

# அஞ்சலிப்பாமாலை

## வெண்பா

*செப்புநற் சித்திரபானு சேரானி சார்பூர்வம்*
*ஒப்பில் தசமிதனை யுற்றபுதன் - இப்புவியில்*
*உற்றபால கிருஷ்ணனாம் ஓங்குபுகழ் மாமனிதன்*
*நற்பதவி தானடைந்த நாள்*

## ஆசிரியப்பா

*புவிபுகழ் விளக்கே! புவிபுகழ் விளக்கே!*
*நீயணைந் தணையோ? நீயணைந் தணையோ?*
*திருக்கோ ணாசலம் திகழ்கேதீச் சரம்*
*எனுமிரு தங்கள் எய்திரு நயனமாய்த்*
*திகழ்ந்திடு மிலங்கா புரியின் வடபால்*
*மருவுயாழ்ப் பாண மாநக ரதன்கண்*
*மன்னிய செல்வக் கழனிகள் மருவிய*
*தொல்புர மென்னும் சீரார் பதிக்கண்*
*வேளாண் மரபினிங் மிக்குயர் குலத்தில்*
*நலம்பெறு கனக சுந்தர முதலியார்*
*தன்வழித் தோன்றிய தகைசால் பிரபு*
*மாதவர் நாமனின் தன்மக னாகிய*
*காசினி முதல்வன் கனக சுந்தரம்*
*செய்யவள் நிகரும் சிவஞான வதியாரை*
*நன்மண மியற்றி நயப்பொடு வாழ்ந்தே*
*பண்ணிய தவத்தின் பயனதூஉ வாக*
*"தோன்றிற் புகழொடு தோன்றுக" என்ற*
*வான்புகழ் வள்ளுவன் வாக்கிற் கேற்பச்*
*சிரேஷ்ட புத்திர னாகத் தோன்றிய*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கருகம்பனை ராஜராஜேஸ்வரி கோவிலில் திருவெம்பாவை தினத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தலைமையுரை வழங்குதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுகுணமார் செல்வன் பால கிருஷ்ணநீ!
தமிழ் மொழிதனை மூளாய் பதியுறு
சைவப் பிரகாச வித்தியா சாலையில்
கற்றுத் தேறிப் பின்னாள் சுழிபுரம்
விக்டோறியாக் கல்லூரி தன்னொடு யாழ்நகர்
மத்திய கல்லூரி ஆகிய வற்றில்
முறையே இடைநிலை சிரேஷ்ட கல்வி
கற்றுத் தேறிய பின்னர் மேலும்
உயர்நிலைக் கல்வியை கொழும்புமா நகரில்
ஹாவாட் கல்லூரியிற் கற்றுத் தேறினை
கல்லூரி வாழ்வினில் உதைபந் தாட்ட
வீரனாக விளங்கியே புகழும் பெற்றனை
"உத்தியோகம் புருஷ லக்ஷணம்"
என்ற ஆன்றோர் முதுமொழிக் கிணங்க
(1956) ஒன்று ஒன்பது ஐந்து ஆறில்
காங்கேசன் துறை சீமெந்துக் கூட்டுத்தாபனம்
தன்னில் ஆய்வு கூட
உத்தியோ கத்தர் பதவி பெற்றே
அகிலம் புகழ அரும்பணி புரிந்தனை
பாரின் மதிப்பொடு வாழும் நாளினில்
இல்லற மல்லது நல்லற மன்றெனும்
எழில்மூ தாட்டி எய்துரைக் கேற்ப
ஆயிரத்துத் தொளாயிரத் தறுபதாம் ஆண்டில்
கருகம்பனை பிரபல வேளாண் மரபினர்
வன்னி ராய முதலியார் வழிவரு
வைத்திய கலாநிதி பொன்னம் பலமும்
பாரியார் திருமதி தங்கம் மாவும்
பெற்று மகிழ்ந்த சிரேஷ்ட புத்திரி
மாசிலா வனிதை மகேஸ் வரியை
வேத மரபினில் வேதியர் வாழ்த்த
மங்கல நாணொடு மாலையும் புனைந்து
மன்றல் சேர மணவினை பூண்டநீ!
மலரும் மேவிய மணமும் போலவும்
பாலும் அதனுறு சுவையும் போலவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*இல்லாள் தன்னுடன் இணைந்து மகிழ்ந்தே*
*இல்லறக் கடன்கள் இனிதுற ஆற்றினை*
(1971) *ஒன்று ஒன்பது ஏழு ஒன்றில்*
*பதவி உயர்வு பெற்றே புத்தளம்*
*சீமெந்துக் கூட்டுத்தாபனத்தில் "கெமிஸ்ற்"*
*ஆக அரும்பணி ஆற்றினை ஐயா!*
*உன்புகழ் உலகெலாம் பரவி ஓங்கிட*
*ஒன்று ஒன்பது எட்டு ஏழில்*
*மேதினி மீதினில் பெரிதிளைப் பாறினை*
*கமலா தேவியை நன்மண மியற்றியே*
*செகதல மீதினில் சேருடல் நீத்த*
*ஆசிரிய திலகம் தேவ தாசன்*
*பிரதிப் பொலிஸ்மா அதிபர் அமரர்*
*இராஜேஸ் வரன் தன்னை மணந்த*
*சீர்சால் நங்கை திலக ஞானம்*
*உடன்பிறப் பென்ன உள்ளத் துகந்தே*
*தடம்புவி வாழ்ந்த தாவிலா வள்ளலே!*
*சுப்பிர மணிய சுவாமியை வரித்த*
*பொற்பார் வனிதை புவனேஸ் வரியொடு*
*இலங்கிழை நல்லாள் இரத்தினாம் பிகையை*
*நண்மணம் புரிந்த இராஜேந் திரன்*
*சாரூப குமாரியை மணவினை பூண்ட*
*தூயநல் லறிஞன் அருளம் பலமும்*
*நங்கையர் திலகம் நாகேஸ் வரியை*
*வரித்தே வாழும் இளைய தம்பி*
*தேவ தாசன் தன்னை மணந்த*
*காரிகை நல்லாற் கமலா தேவி*
*காசினி மீதிற் சகா தேவனை*
*கடிமண மியற்றிய கமலாம் பிகை*
*தாரணி முதல்வன் சாந்தி குமார்*
*தன்மனைவி யாகிய நகுலேஸ் வரியுடன்*
*தையலர் திலகம் ஞானேஸ் வரியை*
*நன்மணம் புரிந்த நகுலேஸ் வரன்*
*மாது திலக ஞானம் தன்னை*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமணம் பூண்ட இராஜேஸ் வரன்
சுகுணத் தோன்றல் குண ரத்தினம்
மணவாள னாக மாநிலத் துற்ற
எழிலா ரணங்கு இராஜேஸ் வரியொடு
சச்சி தானந்தம் தன்னை மணந்த
மங்கையர் திலகம் பரமேஸ் வரி
ஆகியோர் தமக்கு அவனி மீதினில்
அரியநன் மைத்துன ராக அமைந்தனை
செல்விருந் தோம்பி வருவிருந்தினரை
நாடி மகிழ்வுறும் நன்மனம் படைத்தோய்
ஊருணி நீர்நிறைந் துற்ரு லெனவும்
பயனமர முற்ளூர்ப் பழுந்தா லெனவும்
பலர்க்கும் பயன்படும் பண்பு மிக்கோனாகி
"மக்கள் சேவையே மகேசன் சேவை"
என்ற வண்ணம் மனதில் எழுந்திட
கருகம்பனை நாக ராஜேஸ் வரி
ஆலயச் செயலாள ராக அமர்ந்தும்
(1988) ஒன்று ஒன்பது எட்டு எட்டில்
கருகம்பனை சனசமூக நிலையத் தலைமை
தாங்கிச் சேவைகள் பற்பல புரிந்தும்
மக்கள் மனதில் நிலைத்து நின்றனை
(1996) ஒன்று ஒன்பது ஒன்பது ஆறில்
வலிகாமம் வடக்கு செஞ்சிலுவைச் சங்கத்
தலைவர் பதவியும் உன்னை நாடிற்றையா!
(1997) ஒன்று ஒன்பது ஒன்பது ஏழில்
செஞ்சிலுவைச் சங்கப் போஷக ராக
விளங்கி பலரும் மதிக்க வாழ்ந்தனை
பிறந்த கிராமந் தன்னில் விளங்கும்
தொல்புரம் சிக்கனக் கூட்டுறவுச் சங்கச்
செயலாளர் சேவையும் செய்து மகிழ்ந்தனை
மயிலங் கூடல் கிராமோதய நிலையம்
தெல்லி யம்பதி துர்க்கா தேவஸ்தானம்
ஆகிய வற்றினில் சுகாதார சேவை
நிர்வாக சபையிலும் அங்கம் வகித்தனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலய
மஹோற்சவ ஒன்பதாம் திருவிழா உபயம்
வழக்கம் பறை முத்துமாரி அம்மன்
ஆலயந் தன்னில் நவராத்திரி கால
ஆறாம் நாள் உபயந் தன்னொடு
திருவெம் பாவை மூன்றாம் பூஜை
ஆகிய உபயம் எல்லாம் அன்புடன்
செழித்திடு மருள்பெறச் செய்வித்து உயர்ந்தனை
இத்துணைச் சிறந்த இணையிலா நம்பிநீ!
சித்திர பானு சேரானி நன்மதி
புதன் என்னப் புகலுநல் வாரம்
பூர்வ பக்கம் பொருந்திய தசமி
எனுமிவை அமைந்த இனியநற் றினைத்தே
உலக வாழ்வினில் இன்பமும் துன்பமும்
நிலையில் வென்னும் நிலையை யுணர்த்தியே
மனையாள் சோதரி, சுற்றம் சூழலர்
ஆகியோர் தம்மை அவனியில் விடுத்தே
பேரானந்தப் பெருவாழ்வு எய்தினை ஐயா!
இச்செயல் உலகினி லுதித்த உம்பா
அந்தணர் முனிவர் ஆகியோர் தமக்கு
முறியதே யாதவின் ஆறுதல் அடைந்து
"வினைப் போகம் ஒழிந்தாற் காயம்
தினைப் போதும் நிலையாது" என்ற
சித்தாந்த கூற்றைச் சிந்தையில் கொண்டு
உன்றன் ஆன்மா சாந்தி அடைய
அனைவரும் அஞ்சலி செய்கின் றோமே.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுநிலை அஞ்சலி

## கட்டளைக் கவித்துறை

சென்றே மறைந்தனை என்றுரை தம்செவியுற்றிடலும்
நின்றே திகைத்தனர் நீணில மீதிலுண் சுற்றமெலாம்
நன்றே புரிந்திட நல்லுறவாகிய நண்பரெல்லாம்
என்றோ வுமைக் காண்பதென்றே ஏங்கி இரங்கினரே.

## மனையாள் கண்ணீர்

நன்னேய மொடெனை நாளும் புரந்தவென் நாயகனே
பின்னாளுறு துணையா ரெனக்கென்ப துணர்கிலையாய்
மின்னாய் மறைந்திந்த மேதினிதனை விட்டகன்றீர்
எந்நாளினி லுமையான் கண்டுள மகிழ்வெய்துவனே

## சோதரி கதறல்

### வெண்பா

அன்பான சோதரனே ஆசைக் குறைவிடமே
இன்பாய் சுகித்திருந்தோம் இம்மையினில் - இந்நிலத்தே
செப்புமொழி யாதுமின்றிச் சேர்ந்தீர் சிவனடியை
எப்பொழுது வந்துறுவீங்கு

## மைத்துனர் மைத்துனிகள் புலம்பல்

நந்தா விளக்கென நாளும் திகழ்ந்த
செந்தாமரை முகமும் தேன்மொழியும் - அந்தோவுன்
உள்ளத் தயையு முதவியும் வேறுண்டோ
வெள்ளக் கடற் புவியின் மேல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெறாமக்கள் மனத்துயர்

பெற்ற தந்தையைப் போலெமைப் பேணியே
பற்றுடனே பாரதனிற் புரந்தனையே - மற்றுலகில்
எம்முகமே நோக்காது எவ்விடம்தான் சென்றடைந்தீர்
எம்மையினிற் காண்பதுமையீங்கு

## மருமக்கள் பிரலாபம்

அன்பான மாமாவே ஆசைக்குரியவரே
இன்பமுடன் இருந்த எம்மை - இந்நிலத்தே
சற்றும் நினையாது சாருடலம் நீத்திடவே
உற்றகுறை யாதோ வுமக்கு

## பேரர்கள் பிரிவாற்றாமை

என்பேரர் என்றெம்மை எப்போதும் தூக்கியே
உன் மடியில் வைத்திருக்கும் உத்தமனே - மன்னுலகில்
மிக்கனவும் துய்பனவும் வேண்டுவன தந்தளிக்கத்
தக்கவர் நின் போலுண்டோ சாற்று

## சுற்றத்தார் சோகம்

அற்றேம் உதவி அளியென்றோ வந்தோர்க்கு
மற்றுதவி தான்புரியும் மாமனித - பற்றுமிகும்
சுற்றம் யாம்வருந்திற் துயருறவே விட்டகலாத
குற்ற செயல் யாதோ கூறிடுவாய்.

## தேற்றம்

மல்குபுகழ் பால கிருஷ்ணனுமே தான்மறைந்தார்
எல்லவரும் ஏங்கி இரங்குவதென் - சொல்லின்
"புறவாழி சூழ்ந்த புவனத்தே" தோன்றி
இறவாது வாழ்கின்றார் யார்?

*ஆக்கம்:*
*சோதிட கலாநிதி*
**இ. சபாரத்தினக்** குருக்கள்
*(இளைப்பாறிய அதிபர்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஸ்ரீ நகுலாம்பிகை சமேத ஸ்ரீ நகுலேஸ்வர சுவாமி கோவில்**
**ஆதீன கர்த்தாவும் பிரதம சிவாச்சாரியாருமாகிய**
**ராஜ ராஜ ஸ்ரீ கு. நகுலேஸ்வரக்குருக்கள் அவர்களின்**

# ஆத்மசாந்தியுரை

தொல்புரத்தை பிறப்பிடமாகவும் கருகம்பனையை வசிப்பிடமாகவும் நாட்டின் சூழ்நிலை காரணமாகவும் கொழும்பில் வசித்து வந்த நண்பன் பாலகிருஷ்ணன் சிவபதமடைந்த துக்ககரமான செய்தி அறிந்து மனம் கலங்கியது. அன்னார் கடமை கண்ணியம் கட்டுபாடு குருபக்தி தான தருமம் வழங்கல் ஆகியவற்றில் சிறிதும் தவறாமல் நடந்துள்ளார்.

இவர் கருகம்பனைக் கிராமத்தில் எமது ஆலயத்தோடு தொடர்புடைய ஒரு பழம் பெரும் குடியிற் தோன்றிய அமரர் டாக்டர் பொன்னம்பலத்தின் மருமகனாவார். அவரின் குடும்பத்திற்கு அன்னார் பெரும்பாடுபட்டது மன்றி டாக்டர் குடும்பத்துடன் சேர்ந்து கீரிமலை நகுலேஸ்வர ஆலயத்தோடு மிகவும் ஈடுபாடு உள்ளவராகவும் அங்கு நடைபெறும் உற்சவங்களிலும் கலந்து கொள்ளத் தவறியவரல்லர். அவர் என்றும் முக மலர்வோடு தன்னடக்கமுடையவராகவும் காட்சியளிப்பார்.

பிறப்பிலன்றே இறப்பும் எழுதப்படவுள்ளது. இவை எல்லாம் எப்பவோ முடிந்த விடயம் என்று யாழ் முனிவர் யோகர் சுவாமிகள் சொல்லியிருந்தார். ஆகவே அன்னாரின் மறைவால் துயருற்றிருக்கும் மனைவி, சுற்றத்தார் இறைவன் விட்டவழி என்று துயர்நீக்கி அன்னாரின் ஆத்மா நகுலேஸ்வரப் பெருமானின் பாதங்களை அடைய பிரார்த்திப்போமாக.

*சாந்தி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### துர்க்காதுரந்தரி, சிவத்தமிழ்ச்செல்வி
### கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி J.P.
### அவர்களின்

# ஆத்மசாந்திப் பிரார்த்தனை உரை

## அமரர். பாலகிருஷ்ணன்
அவர்களுக்கு

தொல்புரத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள் காலமான செய்தி அறிந்து மிகவும் அதிர்சியடைந்தோம். அமரா் அவர்கள் எமது தேவஸ்தானத்தோடு நெருங்கிய தொடர்புடையவர். அரிய பல சமூகப்பணிகளை ஆற்றியவர் இவர் என்பதை யாவரும் அறிவர். காங்கேசன்துறை சீமெந்துக் கூட்டுத்தாபனத்தில் இவர் ஆற்றிய பணிகளை யாவரும் போற்றுவர். அத்துடன் செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைவராக இருந்து இவர் ஆற்றிய பணிகளை ஒருவரும் மறக்க மாட்டார்கள். இத்தகைய சிறப்புக்கள் பொருந்திய அமரர் பாலகிருஷ்ணன் அவர்களின் இழப்பு ஈடுசெய்யமுடியாதது. என்ன செய்வோம். விதியின் பலனை ஒருவரும் மாற்ற முடியாது என்பதை உள்ளத்தில் கொண்டு ஆறுதலடைவோம்.

இவரின் பிரிவால் துன்பமுற்றிருக்கும் மனைவி, மற்றும் சுற்றத்தவர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எம்பெருமாட்டி துர்க்காதேவியைப் பிரார்த்தித்து அமைகின்றேன்.

*ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் அன்புப் பெரியப்பா

எங்கள் தந்தைக்கு ஓர் அருமை அண்ணனாக இருந்து, எமது தந்தையின் பேரிழப்பிற்கு பின்னர் எங்கள் தந்தையைப் போல் எங்களுக்கு சகல வழிகளிலும் வழிகாட்டி, தந்தை இல்லாக் குறையை நிவிர்த்தி செய்தீர்கள் இனி எங்களிற்கு வழிகாட்ட யார் இருக்கின்றார்?

எங்களின் ஒவ்வொரு படிநிலை வளர்ச்சியையும் கண்டு மனம் மகிழ்ந்து போவீர்களே எங்களின் கல்வி முன்னேற்றங்களையும், வேலைத்தளப் புதினங்களையும் அடிக்கடி விசாரித்துக் கொள்வீர்கள். எங்களை தொடர்ந்து சில தினங்கள் காணாவிட்டால் காலையிலும், மாலையிலும் நாங்கள் செல்லும் பஸ்தரிப்பு நிலையங்களில் பெரியம்மாவிற்கும் தெரியாமல் வந்து சந்தித்துக் கதைப்பீர்களே! இனி மேல் எங்கு சந்திப்பீர்களோ?

இறுதியாக உங்களை மருத்துவ மனையில் சந்தித்த போது உங்கள் கட்டிலில் உங்களிற்கு பக்கத்தில் இருத்தி நீங்கள் எங்களுடன் சிரித்து கதைத்ததை இன்னும் எங்களால் மறக்க முடியவில்லை. இனி தங்கள் புன்னகையை காண்பதெப்போ?

இன்னும் ஓர் இரு தினங்களில் வீடு வந்து விடுவேன் என்று கூறி எங்களை எல்லாம் விட்டுப் பிரிந்து உங்களது நிரந்தர வீட்டிற்கு சென்று விட்டீர்களே எங்கள் பெரியப்பா. இறைவன் திருவடியில் தங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்.

*தங்கள் அன்புப்*
*பெறாமக்கள்*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அமரர் க. பாலகிருஷ்ணன் அவர்களுக்கு

# அஞ்சலி

நேர்மை, ஒழுக்கம், நிதானம், சேவை மனப்பான்மை ஆகிய பண்புகளை தமது வாழ்நாளில் இலட்சியமாகக்கொண்டு வாழ்ந்த பெரியார் தான் அமரர் கனகசுந்தரம் பாலகிருஷ்ணன் ஆவார். அன்னாரின் மறைவுச் செய்தி கேட்டு மிகுந்த கவலை அடைந்தோம்.

அவர்கள் எம்மீது அளவில்லாத அன்பும் பற்றும் பாசமும் கொண்டவர். மிகுந்த கருணை உள்ளம் கொண்டவர் அவருடைய மறைவுச் செய்தி எல்லோரையும் மனம் நெகிழ்வடையச் செய்துவிட்டது. அன்னார் சீமெந்துத் தொழிற்சாலையில் உயர் பதவியில் இருந்த காலத்திலும் சரி, இளைப்பாறிய பின்னரும் சரி தம்மை சமூக, சமயப்பணிகளில் முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டவர். இதனால் எல்லோருடைய உள்ளங்களையும் கொள்ளை கொண்டவர்.

தாம் வாழ்ந்த கிராமத்தில், சமூகப் பணியும் கூட்டுறவுப் பணியிலும் ஈடுபட்டவர். இலங்கை செஞ்சிலுவைச் சங்க வலி-வடக்குப் பிரிவுத்தலைவராக இருந்து பணியாற்றியவர். அந்தக் காலத்தில் செஞ்சிலுவைச் சங்க இலட்சியங்களை முன்னெடுத்துச் செல்வதில் முனைப்பாகப்பாடுபட்டவர். மனிதாபிமானம் மிக்க ஒருமனிதர் மட்டுமல்ல சிறந்த பண்பாளர். தன்னம் கருதாத சேவையினால் புகழ்பெற்ற பெரிய மனிதர்.

அன்னார் மறைவு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். அன்னாரின் இழப்பினால் துயருறும் குடும்பத்தினருக்கு எவ்வாறு ஆறுதல் சொல்வதென்று தெரியவில்லை. எமது அனுதாபத்தைத் தெரிவிப்பதுதான் எமது கடமை என எண்ணுகிறோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தி பெற இறைவனை பிராத்திப் போமாக.

*சாந்தி*

சி. சிவமகாராசா *(முன்னாள் பா.ம.உ)*
*தலைவர், தெல்லிப்பழை*
*இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம்*
*வலி - வடக்குப் பிரிவு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*பல்லுயிரும் ஓம்பி நல்ல குலநலனும் காத்து நிதம்*
*தொல்லுலகில் புகழ்பூத்த வள்ளல் குலத்தோன்றல் எங்கள்*
*நல்லினிய நம்பி பல்கலையும் உணர்ந்த பாலகிருஷ்ணா நீ எமக்கு*
*சொல்லற்கரியான் பாதம் சொல்லாமல் ஏன் சேர்ந்தாய் நினைந்து.*

*இல்லாருக்கினிநுதவி நல்லாரைக் காத்து நிதம்*
*எல்லோரும் வாழ்வடைய வழிகாட்டி வாழ்ந்தாயே*
*பல்லோரும் போற்றும் செல்வா நீ சென்றடைந்தாய்*
*வல்லோமோ உன்பிரிவை ஆற்ற நாம் அந்தோ!*

*இன்முகம் காட்டி இனியவே பேசி என்றும்*
*அன்புடனே ஆதரித்து அருகிருத்தி அமுதளிப்பாய்*
*உன்னை மறப்போமோ உன்பிரிவை பொறுப்போமோ*
*என்ன என்று சொல்லி ஏங்கி அழுவோமே.*

*வகுத்தான் வகுத்த வகை இதுவோ வையகத்தில்*
*தொடுத்ததெல்லாம் வாழ்நாளில் நிலைத்திடுமோ*
*புகுந்து விதிவிளையாட வினைவழியே காலன் வழி*
*தகுந்தபடி தானீசன் தானழைப்பான் என் செய்வோம்.*

*ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி.*

**இ. தவபாக்கியநாதன்**
*மூளாய்.*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

தொல்புரத்தைச் சேர்ந்தவரும் கொழும்பில் வசித்து வந்தவருமான திரு. பாலகிருஷ்ணன் அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு மிகவும் வேதனையும் துயரமும் அடைந்தேன். கடந்த சில ஆண்டுகளாக கடும் சுகயீனம் அடைந்திருந்த அவர் தீவிர சிகிச்சை பெறுவதற்காக கொழும்பில் தங்கியிருந்தார்.அமரர் பாலகிருஷ்ணன் அவர்களை நான் நன்கு அறிவேன். தொல்புரத்தில் புகழ்பூத்த குடும்பத்தைச் சேர்ந்தவர் குடும்ப கௌரவத்துடனும் பண்பாட்டுடனும் கண்ணியத்துடனும் வாழ்ந்தவர். கூடுதலாக அவருடன் பழகும் வாய்ப்பு நான் தெல்லிப்பளைப் பிரதேச செயலாளராக கடமையாற்றிய காலத்தில் ஏற்பட்டது. அக்காலப்பகுதியில் பல்வேறு சமூக சமயப்பணிகளில் ஈடுபட்டிருந்தார். குறிப்பாக வலிவடக்கு இடம்பெயர்ந்த மக்களின் நலன்களில் கூடுதலாக அக்கறை காட்டி செயற்பட்டவர். வலிவடக்குப் பிரிவு இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத் தலைவராக பணியாற்றிய பொழுது இடம்பெயர்ந்த மற்றும் நலன்புரி நிலையங்களில் வாழ்ந்த அகதிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு தன்னாலான சகல முயற்சிகளையும் எடுத்தார். அத்துடன் பல்வேறு சமய சமூகப் பணிகளில் ஈடுபட்டு, சமுதாயத்திற்கு தன்னாலான சேவையை செய்த பெரியார்.

நல்ல கடவுள் பக்தியும் மனித நேயமும் மிக்க ஒருவர் நம்மைவிட்டு பிரிந்திருப்பது தாங்க முடியாத கவலையாக இருக்கின்றது. அண்மையில் நான் கொழும்பில் அவரைச் சந்தித்த பொழுது அவரும் அவரின் பாரியாரும் மிகவும் அன்புடனும் பாசத்துடனும் வரவேற்று மகிழ்ச்சியுடன் சம்பாஷித்த சம்பவம் எனது மனதைவிட்டு அகலாத ஓர் நிகழ்வாக நான் கருதுகிறேன்.

அன்னாரின் இறப்பு எமக்கும் எமது பகுதி மக்களுக்கும் ஈடுசெய்ய முடியாத ஓர் இழப்பாக கருதப்படுகிறது. அவரின் பணிகளை தொடர்வது நாம் அவரிற்குச் செய்யும் அஞ்சலியாகும். அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

*08.07.2002.*

கா. சந்திரராசா

*08. 07. 2002*

*ஓய்வு பெற்ற பிரதேச செயலர்*
*சங்கானை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ශ්‍රී ලංකා රතු කුරුස සමාජය
இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்
SRI LANKA RED CROSS SOCIETY

VALI NORTH
DIVISION

The Power of humanity

# கண்ணீர் அஞ்சலி

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் முன்னாள் தலைவராக இருந்து சேவையாற்றிய அமரர் பாலகிருஷ்ணன் அவர்கள் காலமான செய்தி அறிந்து மிகவும் வேதனை அடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் உங்கள் அனைவரிற்கும் எமது கண்ணீர் அஞ்சலியை செலுத்துகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

*இங்ஙனம்*
அன்னாரின் பிரிவால் அஞ்சலி செலுத்தும்
தலைவர், செயலாளர், பொருளாளர், நிர்வாக
உறுப்பினர்கள், அங்கத்தவர்கள், தொண்டர்கள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## The man with ever smiling face, His very presence is like a sparkling glass of Champagne.

**Mr. Kanagasuntharam Balakrishnan** popularly known as 'Chemist Bala' entered Dr. Ponnampalam family, as a living husband to our sister Mahes Acca 1960. Ever since he was married to Mahes acca he became one of our family member and he treated us as his own brothers and sisters. We affectionately addressed him as 'Bala Athan'.

He was employed as a chemist at Cement Co-operation at Kankesanthurai, understanding his wife's attachment to her parents, brothers and sisters, and in view of the proximity to his work place he made Karukampanai as his home. In later years he was transferred to Puttalam Cement Co-operation and he retired there from service.

Our parents loved him and trusted him so much they entrusted him with various tasks and always consulted with him on family matters, in particular arrangements of marriage for their other children.

Bala Athan took keen interest in our welfare and academic; he gave us lots of encouragement to ensure our academic progress. His aim was to groom at least one of us to follow our father's profession, he spend his spare time to give us lessons in English language, Science and Maths.

He participated in every traditional, cultural and religious ceremonies of Dr. Ponnampalam family and was throughout cooperative and helpful. Indeed he was one of the main pillars of our family.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

He was a man of many talents, a dedicated worker and a devoted husband. He believed in unity and bringing everyone together as one family. Perhaps the hobby, which he took most seriously, was arrangements of marriages. Many modern couples undoubtly owe their allegiance to Uncle Bala and Aunty Mahes to have arranged their marriages.

Bala and Mahes as known to many, loved each other so dearly, this couple never lived even a day apart ever since they were married over forty (40) years ago. Throughout their married life they were always seen together as 'love birds'.

Bala Athan was an unselfish, caring and dedicated social worker.

May his soul rest in peace
Loving Brothers and Sisters in law





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# DEAR BROTHER BALAKRISHNAN

I knew brother Bala since the day of my marriage as he was a very close cousin of my Late husband.

However I had close association with him when he came to reside in Colombo during retirement. In fact even on the day he passed away I went to see him in hospital. As usual he was beaming with smiles and talking to us as if he had no illness or complaint. This is his real nature always smiling and cheerful and ever willing to help any one at anytime.

The news of his death on the same night came as a rude shock to me. It left with a difficult task of consoling his wife who had been so caring and loving for the last 42 years. They had never been separated even for a short period unlike many couples who have to run houses in two different places.

Mr. Balakrishnan had his secondary education at Haward College Colombo and gained employment at K. K. S. Cement Factory and Later at Puttalam Cement co-operation as a chemist. He retired after nearly 40 years of service. During this period he was supportive and helpful to his kith and kin in many ways.

After retirement he spent a good part of his life in social work. Not only did he work for the I C. R. C he would act as arbitrator and mediator in many situations.

During his retired life in Colombo I personally am aware of several marriages which he and his wife were able to arrange successfully. He under took these as a service to his friends and relations.

Mr. Bala used to love to go for a walk in the evenings to meet his friends who enjoyed his company as he was very lovable.

His sudden demise will be sadly missed by his dear wife friends and relations. May god give his wife mahes acca the courage to tide over this over whelming grief.

*May his soul rest in peace*
*om Shanthi*

**Dr. Mrs. T. Saravanapavnanthan**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MEMORIES WHICH CANNOT BE FORGETABLE

Can't you hear all your relatives and friends missing you a lot specially periamma crying Perriappa you were talented and genuine person to trust. You were always pleasant and courteous in dealing with public you were very helpful and cheerful to people who needs a helping hand your smiling face can't be forgetable not only by us, by every body. You were doing all your acts according to word. When we were small you used to take us to several places and treated us very well and taught us several things. Our heartfelt sympathies and may your soul rest in peace in modcha

Aum Shanthi ! Aum Shanthi !! Aum Shanthi !!!

Niece



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரியசித்தி மாலை

1. பந்தம் அகற்றும் அநந்தகுணப்
பரப்பும் எவன் பால் உதிக்குமோ
எந்த உலகும் எவனிடத்தில்
ஈண்டி இருந்து சுரக்குமோ
சந்தமறை ஆகமங்கலைகள்
அனைத்தும் எவன்பால் தகவருமோ
அந்த இறையாம் கணபதியை
அன்பு கூரத் தொழுகின்றோம்.

2. உலகம் முழுதும் நீக்கமற
ஒன்றாய் நிற்கும் பொருளெவனவ்
வுலகிற் பிறக்கும் பொருளெவனவ்
உறாத மேலாம் ஒளியாவன்?
உலகம் புரியும் வினைப்பயனை
ஊட்டுங் களங்கண் எவன் அந்த
உலக முதலைக் கணபதியை
உவந்து சரணம் அடைகின்றோம்

3. இடர்கள் முழுவதும் எவனருளால்
எரிவீ ழும்பஞ் செனமாயும்
தொடரும் உயிர்கள் எவனருளால்
சுரர்வாழ் பதியும் உறச்செய்யும்
கடவுள் முதலோர்க் கூறின்றிக்
கருமம் எவனால் முடிவுறும் அத்
தடவு மருப்புக் கணபதிபொன்
சரணம் சரணம் அடைகின்றோம்.

4. மூர்த்தி யாகித் தலமாகி
முந்நீர் கங்கை முதலான
தீர்த்த மாகி அறிந்தறியாத்
திறத்தி னாலும் உயிர்க்குநலம்
ஆர்த்தி நாளும் அறியாமை
அகற்றி அறிவிப் பான்எவன்அப்
போர்த்த கருணைக் கணபதியைப்
புகழ்ந்து சரணம் அடைகின்றோம்.

5. செய்யும் வினையின் முதல்யாவன்
செய்யப்படும் அப்பொருள்யாவன்
ஐயம் இன்றி உளதாகும்
அந்தக் கருமப் பயன் யாவன்
உய்யும் வினையின் பயன் விளையில்
ஊட்டி விடுவிப்பான் எவன் அந்தப்
பொய்ப்பில் இறையைக் கணபதியைப்
புரிந்து சரணம் அடைகின்றோம்.

6. வேதம் அளந்தும் அறிவரிய
விகிர்தன் யாவன் விழுத்தகைய
வேத முடிவில் நடம்நவிலும்
விமலன் யாவன் விளங்குபர
நாத முடிவில் வீற்றிருக்கும்
நாதன் எவன் எண்குணன் எவன்அப்
போத முதலைக் கணபதியைப்
புகழ்ந்து சரணம் அடைகின்றோம்.

7. மண்ணின் ஓர்ஐங் குணமாகி
வதிவான் எவன் நீர் இடைநான்காய்
நண்ணி அமர்வான் எவன் தீயின்
மூன்றாய் நவில்வான் எவன்வளியின்
எண்ணும் இரண்டு குணமாகி
இயைவான் எவன்வான்இடைஒன்றாம்
அண்ணல் எவன் அக்கணபதியை
அன்பிற் சரணம் அடைகின்றோம்.

8. பாச அறிவில் பசு அறிவில்
பற்றற் கரிய பரன்யாவன்
பாச அறிவில பசு அறிவும்
பயிலப் பணிக்கும் அவன்யாவன்
பாச அறிவும் பசு அறிவும்
பாற்றி மேலாம் அறிவான
தேசன் எவன் அக்கணபதியைத்
திகழச் சரணம் அடைகின்றோம்.

9. இந்த நமது தோத்திரத்தை
யாவன் மூன்று தினம்மும்மைச்
சந்தி களில்தோத் திரங்செயினும்
சகல கரும சித்திபெறும்
சிந்தை மகிழச் சுகம் பெறும்எண்
தினம் உச்சரிக்கின் சதுர்த்தியிடைப்
பந்தம் அகல ஓர்எண்கால்
படிக்கில் அட்ட சித்தியுறும்.

10. திங்கள் இரண்டு தினந்தோறும்
திகழ் ஒருபான் முறையோதில்
தங்கும் அரச வசியமாம்
தயங்க இருபத் தொருமுறைமை
பொங்கும் உழுவ லால்கிளப்பின்
பொருவின் மைந்தர் விழுக்கல்வி
துங்க வெறுக்கை முதற்பலவும்
தோன்றும் எனச் செப்பினர் மறைந்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நவக்கிரக தோஷம் நீங்க

### ஞாயிறு
சீலமாய்வாழ சீரருள் புரியும்
ஞாலம் புகழும் ஞாயிறே போற்றி
சூரியா போற்றி சுந்தரா போற்றி
வீரியா போற்றி வினைகள் களைவாய்.

### திங்கள்
எங்கள் குறைகள் எல்லாம் தீர்க்கும்
திங்களே போற்றி திருவருள் புரிவாய்
சந்திரா போற்றி சற்குணா போற்றி
சங்கடம் தீர்ப்பாய் சந்திரா போற்றி.

### செவ்வாய்
சிறப்புறு மணியே செவ்வாய் தேவே
குறைவில்லாதருள்வாய் குணமுடன் வாழ
மங்கலச் செவ்வாய் குணமுடன் வாழ
மங்கலச் செவ்வாய் மலரடி போற்றி
ஆங்காரஹனே அவதிகள் நீக்கு.

### புதன்
இதமுற வாழ இன்னல்கள் நீக்கு
புதபகவானே பொன்னடி போற்றி
பதம் தந்து ஆள்வாய் பண்ணொலியானே
உதவியாய் அருளும் உத்தமா போற்றி.

### வியாழன்
குணமுள்ள வியாழ குருபகவானே
மணமுள்ள வாழ்வு மகிழ்வுடன் அருள்வாய்
பிரகஸ்பதி வியாழ பரகுருநேசா
கிரகதோஷ மின்றிக் கடாட்சித் தருள்வாய்

### வெள்ளி
சுக்கிர மூர்த்தி சுகமிக ஈவாய்
வக்கிர மின்றி வரமிகத் தருவாய்
வெள்ளிச் சுக்கிர வித்தக வேந்தே
அள்ளிக் கொடுப்பாய் அடியார்க்கருளே.

### சனி
சங்கடம் தீர்க்கும் சனி பகவானே
மங்களம் பொங்க மனம் வைத்தருள்வாய்
சச்சரவின்றி சனீஸ்வர தேவே
இச்சகம் வாழ இன்னருள் தாதா.

### ராகு
அரவேனும் ராகு ஐயனே போற்றி
கரவாதருள்வாய் கஷ்டங்கள் நீக்கி
ஆக அருள்புரி அனைத்திலும் வெற்றி
இராகு கனியே ரெம்மியா போற்றி.

### கேது
கேது தேவே கீர்த்தித் தருவே
பாதம் போற்றி பாவம் தீர்ப்பாய்
வாதம் வம்பு வழக்குகள் இன்றி
கேது தேவே கேண்மையாய் ரக்ஷி.

இந்த நவக்கிரக ஸ்தோத்திரம் சொல்லி ஒவ்வொரு கிரகத்திற்கும் ஒரு மலர் வீதம் ஒன்பது மலரை இடவும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எங்கள் குடும்ப அணையாவிளக்காக அமைந்த எனது ஆருயிர் நாயகன் அமரர் கனகசுந்தரம் பாலகிருஷ்ணன் அவர்கள் சிவபதமெய்திய செய்தி அறிந்து நேரில் வருகைதந்து ஆறுதல் கூறிய அனைவருக்கும் அனுதாபச் செய்திகள் இரங்கலுரைகள் வழங்கியவர்களுக்கும் மலர்வளையங்கள் சாத்தியும் அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், தொலைபேசிமூலம் ஆறுதல் கூறியவர்களுக்கும், உதவிகள் புரிந்தவர்களுக்கும், இறுதிக் கிரியைகள் அந்தியேஷ்டி, ஆன்மசாந்திப்பிரார்த்தனை ஆகியவற்றில் கலந்து கொண்ட அனைவருக்கும் இம்மலர் சிறப்பாக அமைய ஆன்மசாந்தியுரைகள், அஞ்சலி உரைகள் அஞ்சலிப்பாமாலை, கல்வெட்டு ஆகியன தந்துதவிய, அந்தணர்கள், பெரியோர்கள் ஆகியோருக்கும் இம்மலரைக் குறுகிய கால எல்லையில் சிறப்பாக அச்சிட்டு உதவிய நியூ பிரின்ட் கிரா∴பிக்ஸ் அச்சகத்தாருக்கும், மற்றும் உற்றார், உறவினர் அயலவர்கள், நண்பர்கள் எல்லோருக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன்.

*மனைவி*
**பா. மகேஸ்வரி**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கீதாசாரம்

எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையதை எதை இழந்தாய்,
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய் அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைத்திருந்தாய், அது வீணாவதற்கு?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொரு நாள், அது வேறொருவருடையதாகும்.

**இதுவே உலக நியதியும், எனது படைப்பின் சாராம்சமாகும்**

**- பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்**

NEW PRINT GRAPHICS, 289-1/2, GALLE ROAD, COLOMBO-06. TEL: 596312

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org